பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 08 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கல்வியுடன் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் தங்களது திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. சுயசார்பு நாடாக இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் புதிய யோசனைகளுடன் செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் கூறியுள்ளார்.

4. இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உடான் திட்டத்தை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பெல்ஜியத்தில் நடைபெற்ற Flanders Grand Prix ஸ்கேட்டிங் போட்டியின், ஆடவர் ஆயிரம் மீட்டர் பிரிவில், இந்தியாவின் வேல்குமார் ஆனந்தகுமார் தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு மாணவர்களின் பங்களிப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கல்வியுடன் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் சம அளவில் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அறிவு, ஒழுக்கம், தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு உணர்வுடன் மாணவர்கள் பங்காற்ற முன்வர வேண்டும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக குடியரசு துணைத்தலைவர் இன்று தமிழகம் வருகிறார்.

<<<<>>>>

நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபடுத்திக்கொண்டுள்ள தன்னார்வலர்களுக்கு மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற மை பாரத் - நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுடன் அவர் கலந்துரையாடினார்.

சுயசார்பு கொண்ட நாடாக இந்தியாவை உருவெடுக்கச் செய்ய இளைஞர்கள் அர்ப்பணிப்பு உணர்வு, புதுமையான யோசனைகளுடன் செயல்பட வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிகழ்ச்சிகள் இளைஞர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கான தளமாக அமைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்கும் வகையில் பல்வேறு வாய்ப்புகளை மத்திய இளையோர் நல அமைச்சகம் உருவாக்கி வருவதாக திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

நாடு சுதந்திரமடைந்து 80 ஆண்டுகளில் பல்வேறு சவால்களை கடந்து வந்துள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தின விழாவின் ஒருபகுதியாக உச்சநீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று வலியுறுத்தினார்.

சட்டம் மற்றும் நீதித்துறை அமைப்புகள் நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக திரு. சூர்யகாந்த் தெரிவித்தார்.

**<<<<>>>>**

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் உதவியாளர்களுக்கு மதிய உணவு வழங்கும் வகையில் உணவுத் தொகுப்பு வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து துறைகளிலும் ஊழலற்ற, நேர்மையான நிர்வாகம் உறுதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

திருச்செங்கோடு பகுதி மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக டாக்டர் அருண்ராஜ் கூறினார்.

<<<<>>>>

சேலத்தில் இருந்து கொச்சி, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய நகரங்களுக்கு விமான சேவையை உறுதி செய்யும் வகையில் உடான் திட்டத்தை மேலும் 7 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், விமான சேவைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் அப்பகுதியின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு உடான் திட்டத்தை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

திருவொற்றியூர் அரசுப் பள்ளி மாணவர் ஒருவர் சக மாணவர்களால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், பள்ளி மாணவர்களின் இத்தகைய செயல் பெரும் அதிர்ச்சியையையும், வேதனையும் அளிப்பதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மாணவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

மாணவர்களிடையே போதைப்பொருள் புழக்கம் அதிகரித்து வருவது கவலையளிப்பதாக உள்ளது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ள குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், சட்டவிரோத போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் தேவைகளைக் கருத்தில் கொண்டு பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் பவானிசாகர் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்துள்ள நிலையில், பாசனத்திற்காக இந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்படவில்லை.

இந்நிலையில் கீழ்பவானி பாசனப் பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதையடுத்து, குடிநீருக்காக 15 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடுமாறு அப்பகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து கீழ்பவானி வாய்க்காலில் முதற்கட்டமாக வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி திருக்கோயிலில், ஆடிப்பூர திருவிழா நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஆடித் தேரோட்டம் நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Vijayakumar – 34 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

வட தமிழகத்தில் அடுத்த 3 தினங்களுக்கு ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைக் காட்டிலும் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக் கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பலுச்சிஸ்தானில், குடிமக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம், பாகிஸ்தான் ராணுவம் போர் குற்றம் புரிந்துள்ளதாக, பலூச் தலைவர் திரு Mir Yar பலோச் குற்றம் சாட்டியுள்ளார்.

------------

அமெரிக்காவில் இண்டியானா பகுதியில் பெய்த கனமழை காரணமாக, அங்குள்ள ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி, ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

------------

இந்தோனேசியாவில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் உயிழந்தவர்களின் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

------------

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான எம்.ஐ-17 ரக ஹெலிகாப்டர் பாகிஸ்தான் ராணுவத்தால் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் தவறானவை என்று மத்திய பத்திரிகை தகவல் அலுவலகம் கூறியுள்ளது.

------------

மஹாராஷ்டிரா மாநிலத்தில், அரசின் நலத்திட்ட உதவிகள் நேரிடையாகப் பயனாளிகளை சென்றையும் வகையில், நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ்,

மேலும் 29 புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பாத்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

------------

அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில், சிறந்த பொது நிர்வாகத்திற்கான முதலமைச்சர் விருதிற்காக அம்மாநில சுகாதாரத் துறை துணை ஆணையர் திரு Pakke Kessang தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

------------

தூத்துக்குடி மாவட்டத்தில் தூய்மை இயக்கம், போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிராக ஆட்சியர் தலைமையில் அப்பகுதி மக்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

------------

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் சுய வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

------------

திருப்பத்தூர் மாவட்டம் ஆதியூர் ஊராட்சியில் சிறப்பாக பணியாற்றிய 20 தூய்மைப் பணியாளர்களுக்கு ஆட்சியர் திரு. ரவிக்குமார் பாராட்டு தெரிவித்தார்.

------------

வளசரவாக்கத்தில், சென்னை பெருநகரக் காவல்துறை சார்பில், ஆன்லைன் மோசடி, டிஜிட்டல் கைது போன்ற சைபர் குற்றம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

பெல்ஜியத்தில் நடைபெற்ற Flanders Grand Prix ஸ்கேட்டிங் போட்டியின், ஆடவர் ஆயிரம் மீட்டர் பிரிவில், இந்தியாவின் வேல்குமார் ஆனந்தகுமார் தங்கப்பதக்கம் வென்றார்.

---------------

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், கோவை அணி வெற்றி பெற்றது.

திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், கோவை அணி 116 ரன் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

<<<< >>>>